ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2259/12 - 2021 දෙසැම්බර් මස 21 වැනි අඟහරුවාදා - 2021.12.21
2259/12 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க தகவல் திணைக்களம்
### *2022/2023/2024 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கான உத்தியோகபூர்வ வெகுசன ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்*

“சுபீட்சத்தின் நோக்கு” என்ற அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தை ஏற்றுக்கொண்டதற்கு அமைவாக ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடக தொழில் துறையில் பொறுப்புக்களை சிறப்பாக நிறைவேற்றுவதற்கு தேவையான தன்னுரிமையுடைய மற்றும் அமைதியான சூழலை உருவாக்குவது அரசின் பொறுப்பாகும். இதற்கமைவாக சிறந்த மற்றும் தரமான ஊடக கலாசாரத்திற்காக அர்ப்பணித்துள்ள அரசாங்க தகவல் திணைக்களம், தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளை விநியோகிப்பது, ஊடகவியலாளர்களின் தொழில் தரத்தை சிறப்பானதாக மேம்படுத்தி அவர்களது தொழிலின் கௌரவத்தை பாதுகாத்து, கடமைகளை எந்தவித தடையும் இன்றி நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகும்.

ஊடக அடையாள அட்டையை வழங்கும் பணியின் போது செய்தி மற்றும் தகவல்களைத் திரட்டும், தகவல்களைத் தொகுக்கும், சேகரித்த தகவல்களை அச்சு, இலத்திரனியல் அல்லது இணையதளம் மூலமாக வாசகர்களுக்கு /நேயர்களுக்கு தொடர்பாடல்களை மேற்கொள்பவர் செய்திக்கலைஞர் /ஊடகவியலாளராக கருதப்படுவர். ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது இந்த பணிகளில் ஈடுபடும் தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களுக்கு மட்டுமேயாகும்.

ஊடக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் போது தொழில் ரீதியிலான ஊடகவியலாளர்களை மாத்திரம் சிபாரிசு செய்யுமாறு அனைத்து அச்சு, இலத்திரனியல் அல்லது இணையதள ஊடக நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவின் தலைமை அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

1A - G 35623— 15 (2021/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக ஊடக நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்படும் பெயர்ப் பட்டியல் மற்றும் அது தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் குறித்த முழுமையான பொறுப்பு அதனை உறுதி செய்யும் ஊடக நிறுவனங்களின் பிரதானி/ செய்தி ஆசிரியர்/ செய்தி பணிப்பாளர்/ பிரதம ஆசிரியர் அல்லது சம்பந்தப்பட்ட ஊடக நிறுவன அதிகாரிகளை சார்ந்ததாகும்.

2022/2023/2024 ஆகிய மூன்று வருடங்களுக்காக பின்வருமாறு வகைப்படுத்தப்பட்ட ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவதுடன், இதற்குத் தேவையானவை என பரிந்துரைக்கப்படும் கடித ஆவணம் மற்றும் வழிகாட்டிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

1. நிறுவனமயப்படுத்தப்பட்ட /அலுவலக ஊடகவியலாளர் (Journalist)
2. பிராந்திய ஊடகவியலாளர் (Provincial Journalist )
3. சுதந்திர ஊடகவியலாளர் (Freelance Journalist)
4. வெளிநாட்டு ஊடகவியலாளர் (தற்காலிகம்) (Temporary Foreign Journalist)
5. ஊடக நிர்வாகி (Media Administrator)
6. தொழில்நுட்ப கலைஞர் (Technical)
7 . அரசாங்க ஊடக அதிகாரி (Media official)
8. ஊடக சேவை (Media service)

### 01. அடிப்படை நிபந்தனைகள் மற்றும் தேவையான கடித ஆவணங்கள்

I. 2022/2023/2024 ஆகிய மூன்று வருடங்களுக்காக 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை செல்லுபடியான வகையில் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

II. அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனம் ஒன்றில் நிரந்தர அல்லது ஒப்பந்த அடிப்படையில் ஊடகவியலாளராக ஆகக் குறைந்தது 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடமையில் ஈடுபட்டிருக்க வேண்டும். (பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.)

III. சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் பெயர் ஆவணம் பின்வரும் முறைக்கு அமைவாக தயாரித்து ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு கோரும் கடிதம் மற்றும் பெயர்ப் பட்டியல் நிறுவனத்தின் முகவரி அச்சிடப்பட்ட அஞ்சல் தாளில் (Letterhead) ஊடக நிறுவனத்தின் பிரதானி /பணிப்பாளர் நாயகம் /தலைமை நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் /பிரதம ஆசிரியர் செய்திப்பணிப்பாளர் /பிரதான செய்தித் தொகுப்பாளர் ஆகியோரினால் தனக்கே உரிய பெயர், பதவி, கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையுடன் உறுதி செய்து அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும்.

| தொடர் இல. | பெயர் | தே.அ.அ இல. | பதவி | கடமை புரியும் பிரிவு |
|---|---|---|---|---|
| 01 | | | | |
| 02 | | | | |

IV. ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கையை உள்ளடக்கிய கடிதத்தை உறுதி செய்பவர் பெயர் பட்டியலில் அனைத்து பக்கங்களிலும் தனது கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையுடன் உறுதிப்படுத்த வேண்டும்.

V. பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்ட பதவியை உறுதி செய்யும் பொருட்டு, ஊடக நிறுவனத்தினால் வழங்கப்படும் அலுவலக அடையாள அட்டையின் புகைப்பட பிரதியொன்று, பெயர் பட்டியலை உறுதி செய்பவரினால் தனது பெயர், பதவி மற்றும் கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையை இட்டு உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழாக உறுதிப்படுத்த வேண்டும்.

VI. அலுவலக அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரரின் நியமனக் கடிதத்தின் பிரதியொன்று பெயர் பட்டியலை உறுதி செய்பவரினால், பெயர், பதவி, கையெழுத்துடன் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையை இட்டு உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

VII. அரசாங்க தகவல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் www.dgi.gov.lk அல்லது அரசாங்க உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.news.lk) 2022/ 2023/ 2024 ஆகிய ஆண்டுகளுக்கான விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும்.

VIII. முழு பெயர்ப்பட்டியலுக்கு மேலதிகமாக, தனித்தனியாக அனைத்து விண்ணப்பங்களையும் ஊடக நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் /தலைமை நிறைவேற்று அதிகாரி /பொது முகாமையாளர் /பிரதம ஆசிரியர் /செய்தி ஆசிரியர் செய்திப்பணிப்பாளர் /செய்தி முகாமையாளர் /பிரதான செய்தி தொகுப்பாளரினால் தனக்கே உரித்தான கையெழுத்து மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினை முத்திரையையிட்டு உறுதி செய்யப்படுவது கட்டாயமாகும்.

IX. 06 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½inch (2.6cmx3.7cm) அளவிலான தெளிவான நிறப் புகைப்படங்கள் இரண்டுடன் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட அளவிற்கு உட்படாத புகைப்படம் நிராகரிக்கப்படும். இதில் ஒரு புகைப்படம் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழன்று போகாதவாறு ஒட்டப்படுவது அவசியமாகும்.

X. இணையத்தள ஊடக அடையாள அட்டையை விநியோகிக்கும் போது பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படும்.

- செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களை, தொகுப்புக்களை வெளியிடும் இணையத்தளங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- சம்பந்தப்பட்ட இணையத்தளம் 2022 ஆம் ஆண்டுக்காக வெகுசன ஊடக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சில் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், வெகுசன ஊடக அமைச்சின் விடயதானத்துக்கு பொறுப்பான சபை அதிகாரி ஒருவரினால் உறுதி செய்யப்பட்ட பதிவு சான்றிதழின் பிரதி ஒன்று ஊடகவியலாளர் அடையாள அட்டைக்கான விண்ணப்பத்துடன் சமரப்பிக்க வேண்டும். இருப்பினும், வெகுசன ஊடக விடயதான பொறுப்பு அமைச்சினால் பெறப்பட்ட இணையத்தள பதிவுச் சான்றிதழை பெற்றிருப்பது மாத்திரம் ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்கான உரிமை கோருவதற்கு போதுமான நிபந்தனைகள் அல்ல.

- இணையத்தளத்திற்கு ஊடக அடையாள அட்டையை வழங்கும் போது சம்பந்தப்பட்ட இணையத்தளத்தின் பயன்பாடு, நோக்கம், பார்வையிடுபவரின் எண்ணிக்கை (Numbers & Hits) மற்றும் நாளாந்தம் இற்றைப்படுத்தல் (Update) ஆகிய விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும்.

- செய்தி இணையத்தளத்திற்கான ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கும் அனைத்து செய்தி இணையத்தளங்களும் ஊடக நிறுவனமாக வர்த்தக பதிவு (Business Registration) செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு அந்த வர்த்தக பதிவுச்சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதியை சமர்ப்பிக்க வேண்டும். வர்த்தக பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சபை அதிகாரி ஒருவரினால் தனக்கே உரித்தான பெயர், கையெழுத்துடன் இலட்சினை முத்திரையுடன் அது உறுதி செய்யப்பட வேண்டும்.

- இணையத்தளத்திற்கு ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பில் மேலும் தகவல்களை உறுதி செய்து கொள்வதற்கு தேவை என உணரப்படும் பட்சத்தில் அவ்வாறான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டு தேவையான அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும்.

- ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக ஆகக் குறைந்தது 6 மாத காலம் நாளாந்தம் மற்றும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்பட்ட இணையத்தளமாக இருக்க வேண்டும். இந்த இணையத்தளங்கள் பதிவேற்றம் செய்யப்படும் விடயங்களில் ஆகக் குறைந்த வகையில் 35 வீதமானவை செய்தி மற்றும் நடப்பு தகவல்களை அவசியம் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

- ஒரு மொழி ஊடகத்திற்காக ஆகக்கூடிய வகையில் 02 ஊடக அடையாள அட்டைகளுக்கு உட்பட்டதாக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

- இணையத்தள ஊடக நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஊடகவியலாளருக்கு மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவதுடன் இணையத்தள தலைவர் / இணையதள நிர்வாகி / கவனர் / நிருவாக பணிப்பாளர் உள்ளிட்ட வெளிப்பதவிகளை வகிப்போருக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

- இணையதளத்திற்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது, நேரடியான செய்தி இணையதளத்திற்கு மாத்திரமாகும். நிறுவன இணையதளத்திற்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

XI. வெளிநாட்டு ஊடக நிறுவனத்திற்காக ஊடக அடையாள அட்டையை வழங்கும் போது பின்வரும் விடயங்களில் விசேட கவனம் செலுத்தப்படும் :

- சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் இலங்கை பிரதிநிதிகள் / ஊடகவியலாளர்களாக அந்த நிறுவனங்களினால் நியமிக்கப்பட்ட, நிரந்தர ரீதியில் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனங்களில் கடமை புரியும் அலுவலக ஊடகவியலாளருக்கு மாத்திரம் அடையாள அட்டை வழங்கப்படும்.

- இந்த ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் சமர்ப்பிக்கும் தகவல்கள், சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனத்தினால் மேலும் உறுதி செய்யப்பட்ட பின்னரே ஆகும்.

- விண்ணப்பதாரர், தமது ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவதாக வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைமை அதிகாரியினால் வழங்கப்படும் சேவைக் கடிதத்தை அவசியம் சமர்ப்பிக்க வேண்டும்.

- வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் செல்லுபடியான கடவுச் சீட்டு /தேசிய ஆளடையாள அட்டையின் புகைப்படப்பிரதியை ஊடக அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்க வேண்டும்.

- வெளிநாட்டு ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பம் தொடர்பில் ஏதேனும் மேலும் தகவல்களை உறுதிசெய்வதற்கு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படும். தேவையான அறிக்கை பெற்றுக் கொண்ட பின்னர் ஊடக அடையாள அட்டையை வழங்குவது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

XII. 2022 ஆம் ஆண்டில் வழங்கப்படும் ஊடக அடையாள அட்டையின் செல்லுபடியான காலம் 2024, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியுடன் நிறைவடைகின்றது.

**02. ஊடக அடையாள அட்டையை வகைப்படுத்துதல் - முக்கிய நிபந்தனைகள் - மற்றும் தேவையான கடித ஆவணங்கள்.**

I. **நிறுவன மயப்படுத்தப்பட்ட /அலுவலக ஊடகவியலாளர் (Journalist)**

அச்சு, இலத்திரனியல் மற்றும் இணையத்தள துறையில் பணியாற்றும் அலுவலக ஊடகவியலாளர்களுக்காக Jour nalist அடையாள அட்டை வழங்கப்படும். ஊடக அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போர் மேலே குறிப்பிடப்பட்ட இலக்கம் 01 இல் (i) தொடக்கம் (xi) வரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும். பத்திரிகை, வார சஞ்சிகை, வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம் மற்றும் வெளிநாட்டு ஊடக நிறுவனங்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட /அலுவலக ஊடகவியலாளர்களும் இந்தப் பிரிவிற்கு உட்பட்டவர்கள்.

II. **பிராந்திய ஊடகவியலாளர்கள்** (Provincial Journalist)

பிராந்திய ஊடகவியலாளர்களின் பெயர்ப்பட்டியல் சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தினால் மாவட்ட மட்டத்தில் தனித்தனியாக கீழ்கண்ட தகவல்களுடன் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) ஊடகவியலாளரின் பெயர்
(ஆ) தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்
(இ) நிரந்தர முகவரி
(ஈ) ஊடகவியலாளர் செய்திகளை சேகரிக்கும் மாவட்டம் மற்றும் பிரதேசம்
(உ) ஊடகவியலாளரின் தொலைபேசி இலக்கம்,

- தமது நிறுவனத்தின் பிராந்திய ஊடகவியலாளரின் பெயர்ப் பட்டியல், ஊடக நிறுவனத்தின் பிரதானி/ பணிப்பாளர் நாயகம்/தலைமை நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர்/செய்திப் பணிப்பாளர்/பிரதான செய்தித் தொகுப்பாளர்/ பிராந்திய செய்தித் தொகுப்பாளர் / பிரதான ஆசிரியர் / பிராந்திய செய்தி ஆசிரியரினால் பெயர், பதவி, கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ இலச்சினையுடன் உறுதி செய்யப்பட்டு அரசாங்க தகவல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். பெயர்ப்பட்டியலின் அனைத்து பக்கங்களிலும் பெயர்ப் பட்டியலை உறுதி செய்பவர் தமது கையொப்பம் மற்றும் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இலச்சினை இட்டு உறுதி செய்ய வேண்டும்.

- பெயர்ப்பட்டியலின் முதல் பக்கம் மற்றும் மென் பிரதி (Soft Copy), தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்குக் கிடைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மென் பிரதியை media.accre@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

- விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் பொழுது அன்றைய தினத்திற்கு முன் அதாவது 6 மாத காலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½cm (2.6cmx3.7cm) அளவிலான தெளிவான வர்ணப் புகைப்படங்கள் இரண்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட அளவிற்கு உட்படாத புகைப்படம் மற்றும் தெளிவற்ற புகைப்படம் நிராகரிக்கப்படும். இதில் ஒரு புகைப்படம் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட வேண்டும்.

- விண்ணப்பத்துடன் தேசிய ஆளடையாள அட்டையின் / செல்லுபடியான கடவுச்சீட்டின் / செல்லுபடியான வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தின் தெளிவான புகைப்படப்பிரதியை அனுப்ப வேண்டும். பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- தற்பொழுது செய்திகளை வழங்குவதில் செயல்படும் ஊடகவியலாளரின் பெயரை மாத்திரம் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்குமாறு ஊடக நிறுவன பிரதானி /தலைமை பிரதம ஆசிரியர் /செய்திப் பணிப்பாளர் /பிராந்திய செய்தி ஆசிரியர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

- விண்ணப்பப்படிவத்தை (www.dgi.gov.lk) அல்லது (www.news.lk) என்ற இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்ய முடிவதுடன், பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம், "அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம், அரசாங்க தகவல் திணைக்களம், இலக்கம் 163, கிருலப்பனை மாவத்தை, கொழும்பு 05" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக ஒப்படைக்க வேண்டும்.

- விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிராந்திய ஊடகவியலாளர் அடையாள அட்டை" என்று குறிப்பிடப்பட வேண்டும்.

III. **சுதந்திர ஊடகவியலாளர்கள் (Freelance Journalist)**

- ஆகக் குறைந்தது ஒரு வருட காலம் தொடர்ச்சியாக சுதந்திர ஊடகவியலாளராக தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அச்சு ஊடகம் அல்லது இலத்திரனியல் அல்லது இணையதள ஊடக நிறுவனம் ஒன்றில் பணியாற்றியிருக்க வேண்டும். அத்தோடு அதனை உறுதிசெய்வதற்கு கீழ்க் குறிப்பிடப்பற்றவற்றை பூர்த்திசெய்தல் வேண்டும்:-

- விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் ஆறு மாத காலத்திற்குள் தமது பெயரில் வெளியிடப்பட்ட செய்தி மற்றும் நடப்பு விவகாரங்கள் தொடர்பான செய்தி / விசேட கட்டுரை / பல்வேறு நிரலாக்க நிகழ்ச்சிகள்/ புகைப்படம் முதலானவற்றை ஆகக்குறைந்த வகையில் 12 இற்கு குறையாத வகையில் உறுதி செய்யப்பட்ட புகைப்படப் பிரதிகள் அல்லது இறுவெட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- சுதந்திர ஊடகவியலாளர் ஊடக அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கையுடன் தம்மால் செய்தி, விசேட கட்டுரை, நடப்பு விவகார நிகழ்வுகள் வழங்கப்பட்ட அச்சு இலத்திரனியல் மற்றும் இணையதள ஊடக நிறுவனங்கள் மத்தியில் ஆகக் குறைந்த வகையில் ஒரு நிறுவனத்தினால் அல்லது அதன் ஊடக நிறுவனத்திற்கு தொடர்ச்சியாக செய்தி நிகழ்ச்சிகளை அல்லது வழங்குவதாக அந்த நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் எழுதப்பட்ட சான்றிதழை தகவல் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். இதனை அந்த ஊடக நிறுவனத்தின் தலைமை அதிகாரி /செய்திப் பணிப்பாளர் /தலைமை தொகுப்பாளரின் பெயர், கையொப்பத்துடன் உத்தியோகப்பூர்வ இலச்சினையை இட்டு உறுதி செய்தல் வேண்டும்.

## IV. வெளிநாட்டு ஊடகவியலாளர் - தற்காலிகம். (Foreign Journalist – Temporary)

- செய்தி மற்றும் நடப்பு விவகாரங்களில் முக்கியத்துவம் மிக்க விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பில் செய்தி சேகரித்தல், கட்டுரை மற்றும் செய்தி பெறுமதியைக் கொண்ட தொகுப்பு நிகழ்ச்சிகளை தயாரிப்பதற்காக இலங்கைக்கு வரும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு "வெளிநாட்டு ஊடகவியலாளர் தற்காலிகம்" என்ற ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- விண்ணப்பதாரர் தமது ஊடக நிறுவனத்தில் கடமையாற்றுவதாக சம்பந்தப்பட்ட வெளிநாட்டு ஊடக நிறுவனத்தின் தலைமை அதிகாரியினால் உறுதிசெய்யப்பட்ட சேவை சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட கடிதம் சமர்ப்பிக்க வேண்டும்.

- செல்லுபடியான கடவுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டும்.

- ஆறு (06) மாதகாலத்திற்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட 1x1½inch (2.6cmx3.7cm) அளவிலான இரண்டு வர்ண புகைப்படங்கள் விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிப்பதுடன் அதில் ஒரு புகைப்படத்தை விண்ணப்பப்படிவத்தில் குறித்த இடத்தில் கழறாதவாறு ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.

- கடவுச்சீட்டின் புகைப்பட பிரதி அதற்காக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

## V. ஊடக நிர்வாகி (Media Administrator)

- தேசிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊடக நிறுவனத்தின் ஊடக நிருவாகத்திற்கு நேரடியாக பங்களிப்பு செய்யும் ஊடக நிர்வாகிகளுக்காக ஆகக்கூடிய வகையில் ஒரு ஊடக நிறுவனத்திற்கு மூவருக்கு மாத்திரம் ஊடக நிர்வாக அடையாள அட்டை வழங்கப்படும்.

- ஊடக நிறுவனத்தில் விற்பனை மேம்பாட்டு பணிப்பாளர்கள் / முகாமையாளர்கள் / சேமநல அதிகாரிகள் அல்லது விற்பனை மேம்பாட்டுதுறையில் பணியாற்றும் ஏனைய அதிகாரிகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

## VI. தொழில்நுட்ப கலைஞர் (Technical)

- ஊடக கடமைகளில் நேரடியாக ஈடுபடும் இலத்திரனியல் ஊடக துறையின் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு ஊடக தொழில்நுட்ப கலைஞர்களுக்கான ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- மேற்குறிப்பிட்ட இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் ஊடக தொழில்நுட்பகலைஞர் அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்பவரினால் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

## VII. அரசாங்க ஊடக அதிகாரி (Media official)

- அரசாங்க அமைச்சு / திணைக்களம் / அரசாங்க நிறுவனங்களில் சட்டபூர்வமான நிறுவகங்களில் நேரடியாக ஊடக பதவிக்கான உத்தியோகபூர்வ நியமன கடிதத்துடன் ஊடக செயலாளர், ஊடகப் பணிப்பாளர் /செய்திப் பணிப்பாளர்/ ஊடக அதிகாரி / புகைப்படக் கலைஞர் / காணொளி புகைப்பட கலைஞர் / ஊடக உதவியாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்களுக்கு பதவிக்கான தரத்திற்கு அமைவாக ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

- சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரினால் தமது அமைச்சில் அல்லது அமைச்சுக்கு உட்பட்டதாக உள்ள நிறுவகத்தில் ஊடக கடமைகளில் ஈடுபட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட பதவி ஊழியர்களுக்கான அடையாள அட்டைக்கு சம்பந்தப்பட்டவரின் பெயர் மற்றும் பதவியை உறுதி செய்து அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் ஊடக அடையாள அட்டைக்கான கோரிக்கைக்கான கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஆவணத்தின் முழுமையான பொறுப்பு அந்த ஆவணத்தை உறுதி செய்யும் அமைச்சின் செயலாளர் / மேலதிக செயலாளரை சார்ந்ததாகும்.

- இந்த கோரிக்கைக்கான கடிதம் சம்பந்தப்பட்ட அரச நிறுவகத்தின் கோப்புகளின் இலக்கத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாது சமர்ப்பிக்கப்படும் கோரிக்கைக்கான கடிதம் நிராகரிக்கப்படும்.

- அரச ஊடக நிறுவக பிரிவுகளில் கடமைபுரிந்த போதிலும் மேலே குறிப்பிடப்பட்ட பதவியை தவிர்ந்த ஏனைய பதவிகளை வகிப்போருக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

- அமைச்சிக்கு உட்பட்ட அரசாங்கம் சார்ந்த ஊடக பிரிவிற்காக அல்லது நியதிச் சபை ஊடக அடையாள அட்டையை கோரும் பொழுது அந்த ஊடகத்தின் பணிப்பாளர் நாயகம் / பொது முகாமையாளரினால் பெயர்ப் பட்டியல் மற்றும் விண்ணபப்பபடிவம், தனக்கே உரிய பெயர், பதவியுடன் இலச்சினை முத்திரையுடன் உறுதி செய்யப்பட வேண்டும்.

### VIII. ஊடக சேவை (Media Services)

- ஊடக நிறுவனங்களில் செய்தி மற்றும் நடப்பு விவகார பிரிவுகளில் ஊடக நடவடிக்கைகளுக்காக நிறுவனத்தின் விதி முறைகளுக்கு அமைவாக துறைகளில் ஊடக நடவடிக்கைகளில் நேரடியாக பங்கு கொள்வோருக்காக ஊடக சேவை அடையாள அட்டை வழங்கப்படும்.

- மேற்குறிப்பிட்ட இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்ட அனைத்து நிபந்தனைகளையும் ஊடக சேவை அடையாள அட்டைக்காக விண்ணப்பிப்போரினால் முழுமைப்படுத்தப்படல் வேண்டும்.

**பொதுவான நிபந்தனைகள்**

01. 2022/2023/2024 ஆகிய மூன்று வருடங்களுக்காக ஊடக அடையாள அட்டையை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் பணி 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும். அதன் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

02. மாதாந்த வெளியீடுகளுக்காக ஊடக அடையாள அட்டைகள் ஆகக்கூடிய வகையில் மூன்று, இரண்டு மாதத்திற்கு ஒருமுறை வெளிவரும் வெளியீட்டுக்காக ஆகக் குறைந்தது இரண்டு, காலாண்டுக்கு ஒருமுறை வெளிவரும் வெளியீட்டுக்காக ஆகக் குறைந்தது ஒன்று என ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும்.

03. ஆறு மாத அல்லது வருடாந்த சஞ்சிகைகளுக்காக ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

04. செழுமை சஞ்சிகை / வெளியீடு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதை உறுதி செய்வதற்காக சமீபத்தில் தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட சஞ்சிகை / வெளியீடுகளின் 6 மாத பிரதிகள் மற்றும் தேசிய சுவடிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.

05. அனைத்து சஞ்சிகைகள் / வெளியீடுகளுக்கும் இலங்கை பத்திரிகை சபையினால் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. ஏதேனும் பத்திரிகை ஒன்றினால் வெளியிடப்படும் சஞ்சிகை / வெளியீடு மேலதிக வெளியீடு தனியான பத்திரிகையாக கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்தோடு இந்த மேலதிக வெளியீட்டுக்காக அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கும் ஊடகவியலாளருக்கு சம்பந்தப்பட்ட ஊடக நிறுவனத்தின் முக்கிய பத்திரிகையின் பெயரில் மாத்திரம் ஊடக அடையாள அட்டை வழங்கப்படும்.

07. ஊடக நிறுவனத்தில் சேவையில் இருந்து நீக்கப்படும் / வெளியேறும் ஊடகவியலாளர்களின் அடையாள அட்டைகளை மீளப் பெற்றுக்கொண்டு அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைப்பது நிறுவன தலைமை அதிகாரியின் பொறுப்பாகும். அவ்வாறே மீள ஒப்படைக்கப்படாமல் அதற்குப் பதிலாக வேறு ஒரு நபருக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

    இதேபோன்று இந்த ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்திடம் ஒப்படைக்காமல் சம்பந்தப்பட்ட ஊடகவியலாளர்/தொழில் வல்லுநர் வேறு ஒரு ஊடக நிறுவனத்தில் அடையாள அட்டைக்காக விண்ணப்பித்தால் புதிய அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

08. காணாமல் போன ஊடக அடையாள அட்டைக்கு பதிலாக மீண்டும் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளுவதற்காக விண்ணப்பிக்கும் போது, அந்த காணாமல் போன அடையாள அட்டை தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட பின்னர் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்தினால் வழங்கப்படும் பொலிஸ் அறிக்கையின் முதல் பிரதியை உறுதி செய்து அதனை பணியாற்றும் நிறுவனத்தின் மூலம் ஊடக அடையாள அட்டையை வழங்குமாறு கோரும் கோரிக்கையை அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளருக்கு கடிதம் மூலம் முன்வைக்க வேண்டும்.

09. ஊடக அடையாள அட்டை, ஊடக அலுவல்களுக்காக மாத்திரம் பயன்படுத்தப்பட வேண்டும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் முறைகேடாக பயன்படுத்தப்பட்டமை தொடர்பாகவோ அல்லது ஊடக கோட்பாட்டு விதிகளுக்கு அப்பால் செயற்படுதல் போன்ற சந்தர்ப்பங்கள் தொடர்பான தகவல்கள் வெளியானால் ஊடக அடையாள அட்டையை இரத்து செய்தல் அல்லது அந்த ஊடக அடையாள அட்டையை அரசாங்க தகவல் திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவு பிறப்பிப்பதற்கான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளரை சார்ந்ததாகும்.

10. ஊடக அடையாள அட்டை வழங்கப்படுவது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மாத்திரமே ஆகும். ஊடக நிறுவனத்தினால் அடிக்கடி முன்வைக்கப்படும் கோரிக்கை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. அத்தோடு அவ்வாறான கோரிக்கை நிராகரிக்கப்படும்.

11. கௌரவ பெயர் மற்றும் கல்வித் தகைமையுடனான பெயர் குறிப்பிடப்படமாட்டாது. அத்தோடு அடையாள அட்டையில் ஊடகவியலாளரின் பெயர் மற்றும் அவரது தொழில் விபரம் மாத்திரமே குறிப்பிடப்படும்.

12. கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்துக்கான ஊடக அடையாள அட்டையை வழங்குவதை கவனத்திற் கொள்வதற்காக அந்த தொலைக்காட்சி அலைவரிசை ஊடாக ஆகக்குறைந்தது வாரத்தில் 05 செய்தி மற்றும் நடப்புவிவகார நிகழ்ச்சிகளை ஒளிபரப்பியிருக்க வேண்டும். இந்த நிபந்தனையை பூர்த்தி செய்துள்ள கேபிள் தெலைக்காட்சி நிறுவனத்தின் செய்திப் பிரிவுக்காக மாத்திரம் ஆகக்கூடிய வகையில் 10 க்கு உட்பட்டதாக ஊடக அடையாள அட்டைகள் வழங்கப்படும். இவ்வாறு ஊடக அடையாள அட்டைகளை வழங்குவதற்காக இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்தல் ஆணைக்குழு மற்றும் ஊடக அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட கேபிள் தொலைக்காட்சி சேவைக்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரச் சான்றிதழின் நகலை உறுதி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

13. ஊடக அடையாள அட்டையை வழங்குவது தொடர்பாக இறுதித் தீர்மானம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை கொண்டுள்ளதுடன், மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனைகள் மற்றும் தேவையானவை காலத்துக்கு ஏற்ற வகையில் மாற்றும் அதிகாரம் அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும்.

14. கீழ்க் குறிப்பிட்ட துறையைச் சார்ந்த நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஊடக அடையாள அட்டை வழங்கப்படமாட்டாது.

i. சினிமா /தொலைக்காட்சி நாடகம், மேடை நாடகம் போன்ற இசை நிகழ்ச்சிதுறையில் ஈடுபட்டுள்ள கலைஞர்கள்.

ii. விளம்பரம் மற்றும் பிரச்சார நிறுவனங்கள் மற்றும் காணொளி தயாரிப்பு நிறுவனங்கள்.

iii. புனைபெயரின் கீழ் செய்தி /விசேட ஆக்கம் /நிகழ்ச்சிகளை சமர்ப்பிக்கும் ஊடகவியலாளருக்கு அந்த புனைபெயரில்.

iv. செய்தி மற்றும் நடப்பு சம்பவங்களை அறிக்கையிடாத ஊடக நிறுவனங்கள்.

v. வெவ்வேறான விடயதான துறைகளுக்காக வெளியிடப்படும் கை நூல் (Guide Books) அல்லது செய்தி மற்றும் நடப்பு விவகார தகவல்களுக்கு அப்பாலான வெளியீடுகள்.

vi. முகாமையாளர் உதவியாளர் /இணைப்பாளர் போன்ற நேரடி ஊடகவியலாளர் அல்லாத பதவிகளை வகிப்பவர்கள்.

vii. அரசாங்க அமைச்சு, திணைக்களம் மற்றும் இணைப்பு நிறுவனங்களில் நிறுவன இணையத்தளங்கள்.

15. தனிப்பட்ட விருப்பத்தை பூர்த்தி செய்யும் நோக்கில் ஊடக அடையாள அட்டையை பயன்படுத்துவது தொடர்பில் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால், அது தொடர்பில் விசாரணை செய்து சம்பந்தப்பட்ட ஊடகவியலாளரின் அடையாள அட்டையை செல்லுபடியற்றதாக்கும் முழுமையான அதிகாரம் அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தை சார்ந்ததாகும்.

**மொஹான் சமரநாயக்க**
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

2021, திசெம்பர் 21.

EOG 12 - 0221

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.